Ours bank with
Bank of Baroda

மதுரை மணி
Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்




| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 160 | உள்ளூர் - 09.06.2026 | செவ்வாய் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue 160 | வெளியூர் - 10.06.2026 | புதன் | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |

பிதுர் சாபம் நீங்க எளிய பரிகாரங்கள்!
யுபிஎஸ்சி 384 காலியிடங்கள்– பல்வேறு படிப்புகள்!
மதுபான உற்பத்தியாளர்களுக்கு கூடுதல் கட்டணம்!
"தலைவர் 173'... டாக்டராக நடிக்கும் ரஜினி?

# இஸ்ரேல் பிரதமரை எச்சரித்த டிரம்ப்!



வாஷிங்டன், ஜூன். 09–

அமெரிக்க அதிபர் டிரம்ப், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை கவனமாக இருக்குமாறு வலியுறுத்தியதுடன், ஈரானுக்கு எதிரான ஒரு பெரிய பதிலடி நடவடிக்கையை நிறுத்துமாறும் அவரை வற்புறுத்தினார்.

மேற்காசிய நாடான ஈரானுடனான போரை, அமைதி ஒப்பந்த பேச்சுக்காக அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளன. இந்நிலையில், ஈரானுக்கு ஆதரவாக செயல்படும் ஹெஸ்பொல்லா அமைப்பை குறி வைத்து, லெபனானில் நடத்தும் தாக்குதல்களை இஸ்ரேல் நிறுத்தவும் உடன்பாடு ஏற்பட்டது. ஆனால், லெபனான் மீது இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்துகிறது. இதனால், அமைதி பேச்சில் பங்கேற்க ஈரான் மறுத்துள்ளது.

ஈரான் போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்கா முயன்று வரும் சூழலில், இஸ்ரேலின் ராணுவ நடவடிக்கைகள் அமைதி பேச்சை குலைப்பதாக அமைந்தன. இதனால், இஸ்ரேல் மீது அமெரிக்க அதிபர் டிரம்ப் கடும் அதிருப்தியில் உள்ளார். சில தினங்களுக்கு முன்பு, 'நீ பைத்தியக்காரத்தனமாக நடந்து கொள்வதால் தான் உன்னையும், இஸ்ரேலையும் எல்லாரும் வெறுக்குறாங்க,' என, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை தொலைபேசியில் டிரம்ப் கடுமையாக சாடி இருந்தார்.

தற்போது ஈரானின் பல முக்கிய இலக்குகள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தத் தயாரானபோது, நெதன்யாகுவை மீண்டும் நேரடியாக எச்சரித்ததாக டிரம்ப் கூறினார். 'நான், ' நீங்கள் மிகவும் கவனமாக இருங்கள், இல்லையென்றால் மிக விரைவில் நீங்கள் தனித்து விடப்படுவீர்கள்,' என்று கூறினேன்,' என டிரம்ப் கூறியதாக அமெரிக்க செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளது. ஈரான் மேலும் தாக்குதல் நடவடி க்கைகளில் இருந்து பின்வாங்க நெதன்யாகு ஒப்புக் கொண்டதாக வட்டாரம் தெரிவித்துள்ளது.

# 'சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை' தொடக்கம்!



சென்னை, ஜூன். 09–

முதல்–அமைச்சராக விஜய் பொறுப்பேற்றவுடன், குழந்தைகள், பெண்கள் பாதுகாப்புக்காக சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப் படை உருவாக்கப்படும் என்று அறிவித்தார். இதைத்தொடர்ந்து, இந்த அதிரடிப்படையின் முதல் பெண் ஐ.ஜி. யாக பவானீஸ்வரி நியமிக்கப்பட்டு உள்ளார். இந்த படையில் ஒரு போலீஸ் சூப்பிரண்டு, 2 துணை போலீஸ் சூப்பிரண்டுகள் மற்றும் 4 இன்ஸ்பெக்டர்கள் உள்பட 30–க்கும் மேற்பட்ட போலீசார் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

இந்த அதிரடிப்படையில் இடம்பெறும் பெண் போலீஸ் மற்றும் பெண் சப்–இன்ஸ்பெக்டர்களுக்கு நீல நிற சட்டை, காக்கி நிற பேண்ட் என சிறப்பு சீருடை வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் கருப்பு நிற தொப்பியும், கருப்பு நிற ஷூவும் வழங்கப்பட்டுள்ளது. சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையை கடந்த 29–ந்தேதி அன்று முதல்–அமைச்சர் விஜய் தொடங்கி வைப்பதாக இருந்தது. ஆனால் நிர்வாக காரணங்களுக்காக கடைசி நேரத்தில் இந்த நிகழ்ச்சி தள்ளி வைக்கப்பட்டது.


இந்த நிலையில் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையை முதல்–அமைச்சர் விஜய் இன்று (செவ்வாய்க்கிழமை ) மாலை 5 மணிக்கு தொடங்கி வைக்கிறார். இதற்கான விழா சென்னை ராஜரத்தினம் விளையாட்டு அரங்கில் நடைபெறுகிறது.

விழாவுக்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடந்து வருகின்றன. சென்னையில் இந்த திட்டத்தை முதல்–அமைச்சர் தொடங்கி வைத்தவுடன், ஒவ்வொரு மாவட்டத்திலும் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை போலீசார் தங்கள் பணியை தொடங்க உள்ளனர்.

**சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையின் செயல்பாடுகள்:–**

* பொது இடங்களில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளைத் தடுத்தல்
* பொறுப்புடைய அனைவரையும் ஒருங்கிணைத்து, பாதுகாப்பான சமூகத்தை உருவாக்குதல்
* பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு உகந்த சமூகத்தை உருவாக்கும் நோக்கில் மக்கள் இயக்கமாகச் செயல்படுதல்
* பொது இடங்களில் கண்காணிப்பு மற்றும் சுற்றுக்காவல் பணிகளை மேற்கொள்ளுதல்
* குற்றங்கள் நிகழ வாய்ப்புள்ள பகுதிகளைக் கண்டறிந்து நடவடிக்கை மேற்கொள்ளுதல்
* காவல்துறையின் இருப்பை உறுதிசெய்து, பெண்கள் மற்றும் குழந்தைகளிடையே நம்பிக்கையை ஏற்படுத்துதல்.

# மதுபான உற்பத்தியாளர்களுக்கு கூடுதல் கட்டணம்!



சென்னை, ஜூன். 09–

தமிழகத்தில் டாஸ்மாக் நிறுவனத்திற்கு, மதுபானங்களை விநியோகம் செய்யும் உற்பத்தியாளர்களுக்கு புதிய கூடுதல் கட்டணத்தை விதித்து தமிழக அரசு அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது. இதன் மூலம் அரசுக்கு ஆண்டுக்கு சுமார் ரூ.600 கோடி முதல் ரூ.1,000 கோடி வரை கூடுதல் வருவாய் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழக "மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை"யின் அரசாணை G.O.Ms.No.30–இன் படி, திருத்தப்பட்ட புதிய கட்டண அமைப்பு ஜூன் 5 முதல் அமலுக்கு வந்துள்ளது. இதன்படி, உற்பத்தியாளர்கள் மதுபானங்களை ஆலையிலிருந்து வெளியிடுவதற்கு முன்பே இந்த கட்டணத்தை செலுத்த வேண்டும்.

வெளிநாட்டு மதுபானங்கள் வழக்கமான பெட்டிக்கு(–Standard Case) ரூ.90 கூடுதல் கட்டணமும், பீர் ரூ.40 கூடுதல் கட்டணம் மற்றும் ஒயினுக்கு ரூ.20 கூடுதல் கட்டணமும் முழுக்க முழுக்க மதுபான உற்பத்தியாளர்கள் மீது மட்டுமே விதிக்கப்பட்டுள்ளது. இதனால், டாஸ்மாக் கடைகளில் விற்கப்படும் மதுபானங்களின் சில்லறை விலையில் தற்போதைக்கு எந்த மாற்றமும் இருக்காது என்றும், பொதுமக்களுக்கு விலை உயர்வு ஏதும் இல்லை என்றும் அதிகாரிகள் தரப்பில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

முந்தைய நடைமுறைகளில் 'கட்சி நிதி' அல்லது பிற வழிகளில் அதிகாரப்பூர்வமற்ற முறையில் உற்பத்தியாளர்களிடம் வசூலிக்கப்பட்ட தொகையைத் தடுத்து, முறைப்படுத்தும் நோக்கில் இந்த அதிரடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. புதிதாக பொறுப்பேற்றுள்ள தமிழக அரசின் உயர்மட்ட ஆய்வுக் கூட்டத்திற்குப் பிறகு, இந்த வருவாய் கசிவுகள் முற்றிலுமாகத் தடுக்கப்பட்டு, நேரடியாக அரசு கருவூலத்திற்குச் செல்லும் வகையில் சட்டத்திருத்தம் செய்யப்பட்டுள்ளது. கடந்த 2024–25 நிதியாண்டில் டாஸ்மாக் மூலம் தமிழக அரசுக்கு ரூ.48,344 கோடி வருவாய் கிடைத்த நிலையில், இந்தப் புதிய கட்டண விதிப்பு அரசின் வருவாயை மேலும் உயர்த்த உதவும் எனத் தெரிகிறது.

தமிழகத்தில் டாஸ்மாக் மது உற்பத்தியாளர்களுக்கு பெட்டிக்கு ரூ.90 வரை கூடுதல் கட்டணம் விதித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதனால், அரசுக்கு ரூ.600 கோடி வரை கூடுதல் வருவாய் கிடைக்கும். இந்த கட்டண உயர்வு உற்பத்தியாளர்களுக்கு மட்டுமே என்பதால், கடைகளில் மதுபானங்களின் சில்லறை விலை உயர வாய்ப்பில்லை.

# RBI–யின் புதிய விதி?

# 2027 ஏப்ரல் 1 முதல்!

# 730-க்கு கீழ் சிபில் ஸ்கோர் இருந்தால்

# லோன் கிடைக்காது!




புதுடெல்லி, ஜூன். 09–

ஹோம் லோன், கார் லோன் என எது வாங்க வேண்டுமானாலும் வங்கிகள் உங்களுடைய சிபில் ஸ்கோரை தான் முதலில் பார்க்கும். சிபில் ஸ்கோர் சிறப்பாக இருந்தால் எந்தப் பிரச்சினையும் இல்லை. சிறந்த வட்டி விகிதத்தில் கடன் பெறலாம். அதுவே சிபில் ஸ்கோர் குறைவாக இருந்தால் கடன் பெறுவதில் பிரச்சனை ஏற்படும். சிபில் ஸ்கோர் என்றால் என்ன?: சிபில் ஸ்கோர் என்பது 3 எழுத்தைக் கொண்ட எண். இந்த எண் 300 முதல் 900 வரையில் இருக்கும். அவரவர் நிதி நிர்வாகம் எப்படி இருந்தது? என்பதைப் பொறுத்து இந்த ஸ்கோர் வழங்கப்படும். நீங்கள் ஏற்கனவே கடன் பெற்றவரா?, அந்தக் கடனைச் சரியாக அடைத்திருக்கிறீர்களா?, ஏதேனும் இஎம்ஐ–ஐ தவறவிட்டீர்களா?, கடைசியாக நீங்கள் வாங்கிய லோன் எவ்வளவு? அல்லது நீங்கள் கட்டிக் கொண்டிருக்கும் லோன் எவ்வளவு? என அனைத்து விவரங்களையும் இந்த ஒரு ஸ்கோரை வைத்து வங்கிகள் தெரிந்து கொண்டுவிடும்.

சிபில் ஸ்கோர் 730–க்கு மேல் இருந்தால் எந்தப் பிரச்சனையும் இல்லை. அதுவே அதற்கு கீழ் இருந்தால் இனிவரும் காலங்களில் கடன் பெற முடியாமல் போகலாம். ஏனெனில் 2027–ஆம் ஆண்டின் ஏப்ரல் 1–ஆம் தேதி முதல் ரிசர்வ் வங்கி ஒரு புதிய சிஸ்டமை அறிமுகம் செய்ய இருக்கிறது. வங்கிகள் கடன் பெறுபவர்களை மதிப்பீடு செய்வதற்கு ஏதுவாக எக்ஸ்பெக்டட் கிரெடிட் கிளாஸ் என்னும் சிஸ்டம் கொண்டு வரப்பட உள்ளது. கடன் பெறுபவர்களை சரிபார்த்து உண்மையிலேயே அவர்கள் கடனை திருப்பி செலுத்தும் தகுதி உடையவர்களா? என்பதை கண்காணிக்கவே இத்தகைய நடவடிக்கை. கடன் வாங்கும் பலர் இஎம்ஐ கட்டாமல் வங்கிகளை ஏமாற்றி விடுகின்றனர். அந்த சமயத்தில் வங்கிகள் அவர்களுடைய கடனை வாராக்கடன் பட்டியலில் சேர்த்துவிடுகிறது. இனி அப்படி நடக்காது கடன் பெற விண்ணப்பிக்கும் போதே ஒருவர் கடனை சரிவர திருப்பிச் செலுத்துவாரா என்பதை வங்கிகள் தெரிந்து கொண்டுவிடும்.

இந்த நடைமுறை அமலுக்கு வந்தவுடன் கடன் பெறுபவர்களுக்கும் சில பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. ஆனால் வங்கிகளுக்கு இது உச்சபட்ச பாதுகாப்பை வழங்கும் என்பதில் ஐயமில்லை. சிபில் ஸ்கோர் 730–க்கும் கீழ் உள்ள வாடிக்கையாளர்களை வங்கிகள் ரிஸ்க்கான வாடிக்கையாளர்களாக பிரித்து வைக்கும். அவர்களை நல்ல நிதி நடத்தை உடையவராக கருதாது. இது போன்ற வாடிக்கையாளர்களிடம் அதிகமான கடனை முடக்கி வைக்க பல வங்கிகள் முன்வருவதில்லை. உங்களுடைய வருமானம், வேலை என அனைத்தையும் அலசி ஆராய்ந்த பிறகே லோன் கிடைக்கும்.

அதுவும் சிபில் ஸ்கோர் குறைவாக இருக்கும் போது கண்டிப்பாக ஜாமின் கையெழுத்து போடச் சொல்லி ஒரு நபரையோ அல்லது சொத்துக்களையோ வங்கிகள் கேட்கும் வாய்ப்புள்ளது. இதில் கவலைக்குரிய விஷயம் என்ன தெரியுமா? இந்தியாவில் கடன் பெறும் 62% மக்களின் சிபில் ஸ்கோர் 750–க்கும் குறைவாக இருப்பதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. அப்படியானால் 2027–ம் ஆண்டுக்கு பிறகு இந்திய குடிமக்களில் கிட்டத்தட்ட பாதி பேருக்கு கடன் பெறுவதில் சிக்கல் ஏற்படலாம்.

எனவே இனிவரும் காலங்களில் வங்கிகள் யாருக்கு சிபில் ஸ்கோர் 750 முதல் 800க்கு மேல் இருக்கிறதோ அவர்களையே குறிவைத்து லோன் வழங்கும் வாய்ப்புள்ளது. ஏற்கனவே 2026 ஆம் ஆண்டில் 6 மாதங்கள் ஓடிவிட்டன. இன்னும் சொச்சம் இருக்கும் 6 மாதங்களில் புதிய கட்டமைப்பு வர இருக்கிறது. அதற்குள் உங்களுடைய சிபில் ஸ்கோரை அதிகரிப்பது நல்லது. உங்கள் EMI தொகையை தள்ளி போடாமல் செலுத்த முயற்சி செய்தால் ஓரளவுக்கு சிபில் ஸ்கோரை கட்டுக்குள் கொண்டு வரலாம். அதேபோல கிரெடிட் கார்டு வாங்கி வைத்திருக்கிறீர்கள் என்றால் டியூ டேட் வருவதற்கு முன்னரே செலுத்தி விடுங்கள். ஒரே நேரத்தில் பல வங்கிகளில் லோன் கேட்டு அப்ளிகேஷன் போட வேண்டாம். இதுவும் உங்கள் சிபில் ஸ்கோரை கடுமையாக பாதிக்கும்.

# எச்1பி விசா கட்டண உயர்வு ரத்து!




வாஷிங்டன், ஜூன். 09–

எச்–1பி விசாவுக்கு 1 லட்சம் டாலர் கட்டணம் என்ற அதிபர் டிரம்ப் உத்தரவை அந்நாட்டு நீதிமன்றம் ரத்து செய்து அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.

உலகம் முழுதும் இருந்து திறமையான பணியாளர்களை தேர்வு செய்து அவர்களுக்கு பணி வழங்க, அமெரிக்க நிறுவனங்கள் எச்–1பி விசாவை பயன்படுத்தி வருகின்றன. இதை அதிகளவில் பயன்படுத்தும் நாடுகளில் இந்தியா முன்னிலையில் உள்ளது.

விசா வழங்குவது உள்ளிட்ட குடியேற்ற கொள்கைகளை கடுமையாக்கியுள்ள அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப், கடந்தாண்டு புதிய உத்தரவு பிறப்பித்தார். அதன்படி, எச்1பி விசாவுக்கான கட்டணம் , 2 லட்சம் ரூபாயில் இருந்து 88 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டது.

இந்நிலையில் எச்–1பி விசா கட்டண உயர்வை ரத்து செய்யக் கோரி அமெரிக்காவின் 20 மாகாணங்களின் அரசுகள் சார்பில் நீதிமன்றத்தை நாடியது. வழக்கு விசாரணையின் போது பல்வேறு வாதங்கள் முன்வைக்கப்பட்டது. இந்த வழக்கில் நீதிபதி லியோ சொரோகின் பிறப்பித்த உத்தரவு:

எச்–1பி விசா கட்டணத்தை உயர்த்தி உள்ளார். அவருக்கு அத்தகைய அதிகாரத்தை பேரவை வழங்கவில்லை. இந்த அறிவிப்பைச் செயல்படுத்தும் அரசின் முடிவு சட்டவிரோதமானது. இதனால் இந்த அறிவிப்பு முழுமையாக ரத்து செய்யப்படுகிறது. இவ்வாறு நீதிபதி அதிரடி உத்தரவு பிறப்பித்தார். இது அதிபர் டிரம்புக்கு பெரும் பின்னடைவாக கருதப்படுகிறது.

இதற்கிடையே அமெரிக்காவில் நடப்பாண்டில், 'எச் – 1 பி' விசாவுக்கான விண்ணப்பங்களின் எண்ணிக்கை, 38.50 சதவீதம் வரை குறைந்துள்ளதாக அந்நாட்டின் குடியுரிமை மற்றும் குடிவரவு சேவைகள் அமைப்பு தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# மதுரை மணி தலையங்கம்

செவ்வாய்க்கிழமை 09.06.2026

விசுவாவசு தமிழ் வருடம்

வைகாசி மாதம் 26-ம் தேதி

## மீண்டும் தொடங்கிய ஈரான்-இஸ்ரேல் போர்..! பெட்ரோல், டீசல் விலை மேலும் உயருமா..?




மத்திய கிழக்கில் தீவிரமடைந்துள்ள போர், உலகளாவிய எரிசக்தி விலைகள் மீண்டும் உயரக்கூடும் என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. ஈரான் இஸ்ரேல் மீது ஏவுகணைகளை ஏவியதைத் தொடர்ந்து, ஜூன் 8, 2026 திங்கட்கிழமை அன்று கச்சா எண்ணெய் விலை கடுமையாக உயர்ந்தன. ஆசியச் சந்தைகள் திறந்தபோது, பிரெண்ட் (Brent) கச்சா எண்ணெய் விலை 3.6% உயர்ந்து ஒரு பீப்பாய்க்கு 96.47 டாலராக இருந்தது. அதேவேளையில், அமெரிக்க கச்சா எண்ணெயான 'வெஸ்ட் டெக்சாஸ் இன்டர்மீடியட்' (WTI) விலையும் கணிசமாக உயர்ந்து, ஒரு பீப்பாய்க்கு சுமார் 94 டாலரை எட்டியது.

சர்வதேச சந்தையில் ஏற்பட்டுள்ள இந்த கச்சா எண்ணெய் விலை உயர்வு, உள்நாட்டிலும் கவலைகளை ஏற்படுத்தியுள்ளது. கச்சா எண்ணெய் விலை அதிகரிப்பால் இந்தியாவில் பெட்ரோல் மற்றும் டீசல் விலைகள் ஏற்கனவே உயர்ந்துள்ளன; தற்போது மீண்டும் விலை உயர்வு ஏற்படக்கூடும் என்ற அச்சம் நிலவுகிறது.

கச்சா எண்ணெய் விநியோகத்தைத் தக்கவைக்க, பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் கூட்டமைப்பு (OPEC+) ஜூலை முதல் நாளொன்றுக்கு 1.88 லட்சம் பீப்பாய்கள் வரை உற்பத்தியை அதிகரிக்க ஒப்புக்கொண்டுள்ளது. இருப்பினும், மேற்கு ஆசியாவில் நிலவும் நெருக்கடி காரணமாக, சந்தைக்கு இதனால் எந்த நிவாரணமும் கிடைக்கும் என்று தோன்றவில்லை.

பிரெண்ட் கச்சா எண்ணெய் விலை 96 டாலரைக் கடந்தது உலகளாவிய எண்ணெய் விலை அளவுகோலான பிரெண்ட் கச்சா எண்ணெய், திங்கட்கிழமை காலை வர்த்தகத்தில் ஒரு பீப்பாய்க்கு 96.47 டாலரைத் தொட்டது. இருப்பினும், அதன்பிறகு சற்று சரிந்து, காலை 6 மணி நிலவரப்படி 2.45 சதவீதம் உயர்வுடன் 95.34 டாலராக வர்த்தகமானது. அமெரிக்க கச்சா எண்ணெயான WTI-யும் சற்று சரிந்து 92.58 டாலராக இருந்தது.

எண்ணெய் விநியோகத்தை அதிகரிக்க OPEC+ முடிவு கச்சா எண்ணெய் விநியோகம் தடையின்றி நடைபெறுவதை உறுதிசெய்ய, OPEC+ அமைப்பு ஜூலை முதல் நாளொன்றுக்கு 1.88 லட்சம் பீப்பாய்கள் வரை உற்பத்தியை அதிகரிக்க ஒப்புக்கொண்டுள்ளது. ஆனால், ஹார்முஸ் நீரிணையில் (Strait of Hormuz) நிலவும் தற்போதைய முற்றுகை நிலை, உற்பத்தியை அதிகரிக்கும் OPEC+-ன் முடிவைச் செயல்படுத்துவதில் மிகப்பெரிய தடையாக உள்ளது. இதன் காரணமாகவே, மத்திய கிழக்கில் பதற்றம் தணியும் வரை கச்சா எண்ணெய் விலைகள் குறைய வாய்ப்பில்லை. பெட்ரோல் மற்றும் டீசல் விலைகள் மேலும் உயர்வதற்கான அபாயம், இந்தியா உட்பட உலகம் முழுவதும் உள்ள நாடுகளைத் தொடர்ந்து பாதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது..

## டிரான்ஸ்பார்மர் கொள்முதல் முறைகேடு - சிபிஐ வழக்குப்பதிவு!



சென்னை, ஜூன். 09–

கடந்த 2021 முதல் 2023 ஆம் வரையிலான காலகட்டத்தில், செந்தில் பாலாஜி, மின்சாரத்துறை அமைச்சராக பதவி வகித்த காலத்தில், 45 ஆயிரம் டிரான்ஸ்பார்மர்கள் கொள்முதல் செய்ததில் 397 கோடி ரூபாய் முறைகேடு நடந்துள்ளதாகக் கூறி சிறப்பு புலனாய்வு குழு விசாரணைக்கு உத்தரவிடக் கோரி அறப்போர் இயக்கத்தின் சார்பிலும், சிபிஐ விசாரணைக்கு உத்தரவிடக் கோரி அதிமுக வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் இ.சரவணன் மற்றும் ராஜ்குமார் ஆகியோர் சார்பிலும் சென்னை ஐகோர்ட்டில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இந்த வழக்குகளை விசாரித்த தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி, நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வு, டிரான்ஸ்பார்மர்கள் கொள்முதல் முறைகேடு புகார்கள் மீது சிபிஐ விசாரணைக்கு மாற்றி உத்தரவிட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக புதிதாக விசாரணையை நடத்த சிபிஐக்கு உத்தரவிட்ட நீதிபதிகள், வழக்கு தொடர்பான ஆவணங்களை சிபிஐ வசம் ஒப்படைக்க வேண்டும் என, லஞ்ச ஒழிப்புத்துறைக்கு உத்தரவிட்டனர்.

ஆவணங்களை பெற்றுக் கொள்ளும் சிபிஐ, விரைந்து விசாரணையை நடத்தி முடித்து, சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், சிபிஐ விசாரணைக்கு, டான்ஜெட்கோ, லஞ்ச ஒழிப்புத் துறை, தமிழக அரசு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் எனவும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

இந்நிலையில் டெண்டர் முறைகேட்டில் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி மீது சிபிஐ வழக்குப்பதிவு செய்துள்ளது. அதிகாரத்தை தவறாக பயன்படுத்துதல், கூட்டு சதி உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. மின் விநியோக மின்மாற்றிகள் கொள்முதல் செய்ததில் ரூ.397 கோடி ஊழல் என புகார் எழுந்துள்ளது.

கடந்த திமுக ஆட்சியில் 2021 முதல் 2023 வரையிலான காலகட்டத்தில் டெண்டர் முறைகேடு நடந்துள்ளதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது. ரூ.397 கோடி டெண்டர் முறைகேடு புகாரில் வழக்குப்பதிவு செய்தது சிபிஐ.

## எம்.எல்.ஏ.,க்கள் ராஜினாமா விவகாரம்; மதிமுக முடிவுக்கு விஜய் தடை!

சென்னை, ஜூன். 09–

ம.தி.மு.க., – எம்.எல்.ஏ.,க்கள் ராஜினாமா விவகாரத்தில், துரை வைகோவின் யோசனையை ஏற்க, முதல்வர் விஜய் மறுத்து விட்டதாக தெரிகிறது. தமிழக சட்டசபை தேர்தலில், தி.மு.க., கூட்டணியில் நான்கு தொகுதிகளில், உதயசூரியன் சின்னத்தில் ம.தி.மு.க., போட்டியிட்டது. அதில், இரு தொகுதிகளில் வெற்றி பெற்றது. தேர்தலில் த.வெ.க.,வுக்கு பெரும்பான்மை கிடைக்காததால், தி.மு.க., கூட்டணியில் தனிச்சின்னத்தில் வெற்றி பெற்ற காங்கிரஸ், வி.சி.க., – முஸ்லிம் லீக் மற்றும் கம்யூ., கட்சிகள் அணி மாறின. இதில், காங்., – வி.சி.க., மற்றும் முஸ்லிம் லீக் கட்சிகள், அமைச்சரவையிலும் சேர்ந்துள்ளன. இதனால், 'தி.மு.க., சின்னத்தில், ம.தி.மு.க.,வினர் போட்டியிட்டது துரதிருஷ்டமானது' என, ம.தி.மு.க., முதன்மை செயலர் துரை வைகோ, தன் மனக் குமுறலை வெளிப் படுத்தி இருந்தார்.

இந்நிலையில், திருச்சி சென்றிருந்த முதல்வர் விஜயை அவர் சந்தித்தார்.



அத்துடன், கடந்த 4ம் தேதி முதல்வர் விஜயை அவரது வீட்டிலும் சந்தித்து பேசினார்.

இதுகுறித்து, த.வெ.க., வட்டாரங்கள் கூறியதாவது: த.வெ.க., அமைச்சரவையில் இடம் பெற முடியாமல் போனதால், துரை வைகோ மிகுந்த மன உளைச்சலில் இருக்கிறார். அதனால், முதல்வரை சந்தித்த துரை வைகோ, 'நீங்கள் சொன்னால், இப்போதே எங்கள் இரு எம்.எல்.ஏ.,க்களையும் ராஜினாமா செய்ய வைத்து, தி.மு.க., கூட்டணியில் இருந்து வெளியேறி, உங்களுடன் கூட்டணிக்குள் வந்து விடுகிறோம்; நாம் இணைந்து இடைத்தேர்தலை சந்திக்கலாம்' என்று கூறியிருக்கிறார்.

ஆனால், முதல்வர் விஜய்க்கு இதில் விருப்பமில்லை. ஏனென்றால், த.வெ.க., கூட்டணியில் இருந்து கம்யூ., கட்சிகள் வேண்டுமானால் வெளியேற வாய்ப்புள்ளது. அவர்களின் நான்கு எம்.எல்.ஏ.,க்களை ஈடுகட்ட, அ.தி.மு.க.,வில் இருந்து நான்கு பேர் வந்து விட்டனர்.

ஏற்கனவே, குதிரை பேரம் என, த.வெ.க., அரசு மீது விமர்சனம் இருக்கிறது. இந்நிலையில், தி.மு.க., சின்னத்தில் வெற்றி பெற்றவர்களை ராஜினாமா செய்ய வைத்தால், த.வெ.க.,வுக்கு கெட்ட பெயர் தான் கிடைக்கும். அதன் தாக்கம், இடைத்தேர்தலில் த.வெ.க.,வின் வெற்றியை பாதிக்கும் என்று முதல்வர் விஜய் நினைக்கிறார்.

இருப்பினும், ம.தி.மு.க., – எம்.எல்.ஏ.,க்களை ராஜினாமா செய்ய வைத்து, கூடுதல் தொகுதிகளில் இடைத்தேர்தலை சந்தித்தால், த.வெ.க.,வுக்கு நல்லது என, அதன் அரசியல் வியூக வகுப்பாளர்கள் கருதுகின்றனர். இவ்வாறு அந்த வட்டாரங்கள் கூறின.

## நீட் தேர்வு ரத்து: மருத்துவமா? பொறியியலா?; கவுன்சிலிங்கில் பங்கேற்கும் மாணவர்கள் தடுமாற்றம்!

சென்னை, ஜூன். 09–

நடப்பாண்டுக்கான நீட் தேர்வு ரத்து செய்யப்பட்டு, மீண்டும் நடத்தப்பட உள்ள நிலையில், ஜே.இ.இ., மெயின் மற்றும் அட்வான்ஸ்டு தேர்வுகள் முடிந்து, கவுன்சிலிங் நடந்து வருகிறது. இரண்டு தேர்வுகளையும் எழுதிய உயிரியல் மற்றும் கணிதப் பிரிவு மாணவர்கள், தற்போது குழப்பத்தில் ஆழ்ந்துள்ளனர்.



உயிரியல் மற்றும் கணிதம் ஆகிய இரு பாடங்களையும் முதன்மையாக கொண்டு படிக்கும் மாணவர்கள், மருத்துவம் மற்றும் பொறியியல் என இரண்டு தேசிய நுழைவு தேர்வுகளுக்கும் தயாராவது வழக்கம். இவர்களின் முதல் இலக்கு மருத்துவமாகவே இருக்கும். அதில் வாய்ப்பு நழுவும் பட்சத்தில், தலைசிறந்த தொழில்நுட்ப கழகங்களான, ஐ.ஐ.டி., – என்.ஐ.டி., உள்ளிட்டவற்றில், பொறியியல் படிப்பை தேர்ந்தெடுக்கின்றனர்.

நாடு முழுதும் ஆண்டுதோறும், 15 லட்சம் பேர் ஜே.இ.இ., தேர்வு எழுதுகின்றனர். இதில், 20 முதல் 25 சதவீத மாணவர்கள் உயிரியல் மற்றும் கணிதம் ஆகிய இரண்டு பாடங்களையும் சேர்த்து படித்தவர்களாக உள்ளனர். தமிழகத்தில் மட்டும், 40,000 மாணவர்கள் நீட் மற்றும் ஜே.இ.இ., ஆகிய இரண்டு தேர்வுக்கும் பயிற்சி பெறுகின்றனர்.

ஆனால், இந்த ஆண்டு நீட் தேர்வில் பல்வேறு குளறுபடி எழுந்ததால், முழுமையாக ரத்து செய்யப்பட்டு, மறுதேர்வு அறிவிக்கப்பட்டுள்ளது. அதே வேளையில், ஜே.இ.இ., மெயின் மற்றும் அட்வான்ஸ்டு தேர்வுகள் முடிந்து, கடந்த, 2ல் இருந்து, மாணவர் சேர்க்கைக்கான கவுன்சிலிங் துவங்கியது. வரும் 15ல், முதல் சுற்றுக்கான சீட் ஒதுக்கீடு வெளியிடப்படுகிறது. இதனால், மருத்துவத்துக்கு காத்திருப்பதா? பொறியியல் படிப்பில் சேர்வதா என, பல மாணவர்கள் குழப்பத்தில் ஆழ்ந்துள்ளனர்.

பள்ளி ஆசிரியர்கள் கூறியதாவது: ஐ.ஐ.டி., – என்.ஐ.டி., உள்ளிட்ட கல்லூரியில் சீட் உறுதி செய்து கொண்டால், அதற்கான சேர்க்கை முன்பணமாக, 2 லட்சம் வரை உடனடியாக செலுத்த வேண்டும். சேர்ந்த பின்பு, மருத்துவ நுழைவுத்தேர்வு முடிவுகள் வெளியாகி, அதில் சேர்க்கை கிடைத்தால், ஏற்கனவே உறுதி செய்த பொறியியல் இடத்தை ரத்து செய்வதில் பல்வேறு சிக்கல்கள் உள்ளன.

லட்சக்கணக்கான மாணவர்கள் போட்டி போடும், ஐ.ஐ.டி., போன்ற இடங்களில் சேர்ந்துவிட்டு, கவுன்சிலிங் முடிந்துவிட்டு, அதிலிருந்து விலகினால், அந்த இடங்களை மீண்டும் நிரப்ப வாய்ப்பில்லை. இதனால் அரசு நிதியும், வாய்ப்பும் வீணடிக்கப் படுகிறது. அதே சமயம், மாணவர்களும், கட்டிய முன்பணம் முழுமையாக பெற முடியாது.

இதையெல்லாம் கருத்தில் கொண்டு, ஐ.ஐ.டி., –என்.ஐ.டி., உள்ளிட்டவற்றில் சேர்ந்துவிட்டு, மருத்துவ படிப்புகளுக்காக விலகும் மாணவர்களுக்கு முன்பணம் முழுமையாக கிடைக்கவும், அதனால் காலியாகும் இடங்களை பூர்த்தி செய்யவும், இந்த ஆண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழகத்தில் பொறியியல் கல்லூரி சேர்க்கை கவுன்சிலிங்கும் விரைவில் துவங்க உள்ள நிலையில், அங்கும் இதே பிரச்னை ஏற்படும். இதற்கேற்ப அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## சாதிவாரி கணக்கெடுப்பு - முதலமைச்சர் விஜயை சந்தித்தார் அன்புமணி!

சென்னை, ஜூன். 09–

தமிழ்நாட்டில் 69 சதவீத இடஒதுக்கீட்டை பாதுகாக்கவும், ஒட்டுமொத்த சமூக மேம்பாட்டிற்காகவும் தமிழக அரசே சாதிவாரி கணக்கெடுப்பை (சமூகநீதி சர்வே) உடனடியாக நடத்த வேண்டும் என்று பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தி வருகிறார்.

இந்நிலையில், சென்னை தலைமை செயலகத்தில் முதலமைச்சர் விஜயை பாமக தலைவர் அன்புமணி சந்தித்தார்.

அப்போது, சாதிவாரி கணக்கெடுப்பை மாநில அரசு நடத்த வேண்டும் என வலியுறுத்தினார். பாமக நடத்திய அனைத்துக்கட்சி தீர்மானத்தை முதலமைச்சர் விஜய்யிடன் அன்புமணி வழங்கினார்.




## வீரப்பன் சொன்ன மேட்டர்..சுகன்யா தொடர்ந்த வழக்கு! 30 வருடம் கழித்து வந்த தீர்ப்பு!!

சென்னை, ஜூன். 09–

பாரதிராஜா இண்ட்ரோ செய்த கதாநாயகிகளுள் ஒருவர், சுகன்யா.

அசின், த்ரிஷா எல்லாம் வருவதற்கு முன்பு, 80 மற்றும் 90களில் தமிழில் டாப் நடிகைகளுள் ஒருவராக இருந்தவர், சுகன்யா. இவர் குறித்து வீரப்பன் பேசிய சில விஷயங்கள் 30 வருடங்களுக்கு முன்பு பெரிதாக பேசப்பட்ட நிலையில், அதன் தொடர்பான வழக்கில் இவருக்கு சாதகமாக தீர்ப்பு வந்துள்ளது.



பாரதிராஜா இண்ட்ரோ செய்த கதாநாயகிகளுள் ஒருவர், சுகன்யா.

**சுகன்யா பற்றி வீரப்பன் சொன்னது என்ன?**

90களில் சத்தியமங்கலம் வனப்பகுதிகளில், தனக்கென தனி ராஜ்ஜியத்தை நடத்தி வந்த, 'கேங்க்ஸ்டார்' சந்தன மரக்கடத்தல் வீரப்பன், சுகன்யா குறித்து 30 வருடங்களுக்கு முன் பேசிய விஷயங்கள் பகீர் கிளப்பியது. 1996ஆம் ஆண்டில், மூத்த பத்திரிகையாளரான நக்கீரன் கோபால், வீரப்பனை பேட்டியெடுத்தார். அந்த பேட்டியில் வீரப்பன், முன்னாள் பிரதமர் ஒருவரின் மகனுக்கும் சுகன்யாவுக்கும் திருமணத்தை மீறிய உறவு இருப்பதாக கூறியிருந்தது பகீர் கிளப்பியது. இந்த பேட்டியானது, பிரபல தொலைக்காட்சியில் அப்படியே ஒளிபரப்பினர்.

**நீதிமன்ற வழக்கு..**

வீரப்பனின் இந்த பேட்டியை பார்த்து அதிர்ச்சியடைந்த சுகன்யா, இந்த பேட்டியால் தன்னுடைய நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டதாகவும், சினிமா வாய்ப்புகள் பாதிப்படைந்ததாகவும் கூறி, தனக்கு பத்து லட்சம் அந்த குறிப்பிட்ட தொலைக்காட்சி நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்று வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கானது, 30 வருடங்களுக்கும் மேலாக விசாரிக்கப்பட்டிருந்தது. இது குறித்து சென்னை உயர்நீதிமன்றம் சமீபத்தில் உத்தரவு ஒன்றை பிறப்பித்திருக்கிறது.

அதில், சுகன்யாவிற்கு அந்த குறிப்பிட்ட தொலைக்காட்சி தரப்பிலிருந்து 10 லட்சத்து 500 ரூபாய் நஷ்ட ஈடாக வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தது.


மேலும், இந்த நேர்காணலின் அவதூறான பகுதிகளை மீண்டும் ஒளிபரப்பக்கூடாது என்ற நிரந்தர தடை உத்தரவும் தொடரும் என்றும் தீர்ப்பளித்தது.

**வழக்கின் பின்னணி:**

2015ல், சென்னை நகர சிவில் நீதிமன்றம் நடிகை சுகன்யாவிற்கு சாதகமாக வழங்கிய தீர்ப்பை எதிர்த்து அந்த குறிப்பிட்ட சேனல், மேல்முறையீடு செய்திருந்தது. இந்த மேல்முறையீடு மனுவை நீதிபதில் கே.குமரேஷ் பாபு தள்ளுபடி செஉதிருந்தார். மேலும், பேட்டியில் கூறப்பட்ட தகவல்களை ஒளிபரப்பும் முன்பு சரிபார்க்க வேண்டிய பொறுப்பு தொலைக்காட்சி நிறுவனத்திற்கு இருப்பதாகவும், அந்த பொறுப்பை மீறியதால் தீங்கிழைக்கும் நோக்கம் நிரூபிக்கப்பட்டிருப்பாதகவும் அவர் கூறியிருந்தர்.

**சுகன்யாவின் திருமண வாழ்க்கை:**

நடிகை சுகன்யாவிற்கு ஸ்ரீதர் என்பவருடன் திருமணம் நடந்தது. திருமணம் செய்து கொண்டு இவர் வெளிநாட்டில் செட்டில் ஆகிவிட்டார். ஆனால், திருமணம் முடிந்த சில வருடங்களிலேயே இருவருக்குள்ளும் பிரச்சனை வந்ததால், இருவரும் விவாகரத்து பெற்றனர். அதன் பிறகு சுகன்யா சிங்கிளாக வாழ்ந்து வருகிறார். எந்த படங்களிலும் சரியாக நடிக்காத இவர் குறித்து இப்படியொரு செய்தி வந்திருப்பது பலருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



## பிதுர் சாபம் நீங்க எளிய பரிகாரங்கள்!





ஜோதிட நம்பிக்கைகளின்படி, முன்னோர்களின் ஆசீர்வாதம் இல்லாமை அல்லது அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் முறையாக செய்யப்படாததால் "பிதுர் சாபம்" ஏற்படலாம் என்று கருதப்படுகிறது. இதன் காரணமாக குடும்பத்தில் தடை, திருமண தாமதம், குழந்தைப்பேறு பிரச்சினை, பொருளாதார சிக்கல்கள் போன்றவை ஏற்படுவதாக பலர் நம்புகின்றனர்.

பிதுர் சாபம் நீங்குவதற்கு அமாவாசை நாட்களில் முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்வது சிறந்த பரிகாரமாக கருதப்படுகிறது. மேலும், மறைந்த பெற்றோர் மற்றும் முன்னோர்களை நினைத்து வழிபடுதல், அவர்களின் நினைவு நாளில் அன்னதானம் செய்வது நல்ல பலன்களை தரும் என நம்பப்படுகிறது.

ஏழை எளியவர்களுக்கு உணவு, உடை மற்றும் கல்வி உதவிகள் வழங்குவதும் புண்ணியமாக கருதப்படுகிறது. குறிப்பாக காகங்களுக்கு உணவு வைப்பது முன்னோர்களை திருப்திப்படுத்தும் ஒரு வழிபாட்டு முறையாக பலர் கடைப்பிடிக்கின்றனர்.

ஆலமரம், அரசமரம் போன்ற புனித மரங்களை வணங்கி சுற்றி வருவதும், கோவில்களில் விளக்கு ஏற்றி பிரார்த்தனை செய்வதும் பரிகாரங்களில் ஒன்றாக சொல்லப்படுகிறது. மகாளய அமாவாசை மற்றும் தை அமாவாசை போன்ற நாட்களில் முன்னோர் வழிபாட்டை மேற்கொள்வது மிகவும் சிறப்பானதாக கருதப்படுகிறது. இவை அனைத்தும் மத மற்றும் பாரம்பரிய நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டவை. முன்னோர்களை மரியாதையுடன் நினைத்து நல்ல செயல்களில் ஈடுபடுவது குடும்பத்தில் மனநிம்மதியையும் ஒற்றுமையையும் அதிகரிக்க உதவும்.



## சினிமா துளிகள்..!

## 'தலைவர் 173'... டாக்டராக நடிக்கும் ரஜினி?



ராஜ்கமல் ஃபிலிம்ஸ் தயாரிப்பில் அஸ்வத் மாரிமுத்து இயக்கத்தில் நடிகர் ரஜினிகாந்த் நடிக்க உள்ளார். இப்படத்திற்கு தற்காலிகமாக 'தலைவர் 173' என பெயரிடப்பட்டுள்ளது.

தமிழ் திரையுலகில் முன்னணி நட்சத்திரங்களாக வலம் வரும் உலக நாயகன் கமல்ஹாசன் மற்றும் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நீண்ட இடைவெளிக்கு பின் 'தலைவர் 173' மூலம் மீண்டும் இணைகின்றனர். இப்படம் அறிவிக்கப்பட்டதில் இருந்தே மிகவும் அதிகளவில் ரசிகர்களால் எதிர்பார்க்கப்படும் படங்களில் ஒன்றாக மாறியுள்ளது.

கடந்த சில தினங்களாக 'தலைவர் 173' படம் குறித்த தகவல்கள் சினிமா வட்டாரத்தில் வெளிவந்த வண்ணம் உள்ளன. அதன்படி, 'தலைவர் 173' படத்தில் பிரபல இயக்குநர் மிஸ்கின் நடிக்க உள்ளதாக கூறப்படுகிறது. மேலும், இப்படத்தில் சாண்டி மாஸ்டரின் நடன அசைவில் ரஜினிகாந்துக்காக ஒரு அதிரடியான பாடலுடன் படப்பிடிப்பு தொடங்கவுள்ளதாகக் தகவல்கள் வெளியாகின.

இந்த நிலையில், 'தலைவர் 173' படத்திற்கான அரங்குகள் அமைக்கும் பணி தற்போது பூந்தமல்லியில் நடைபெற்று வருவதாக கூறப்படுகிறது. இதனால் இம்மாத இறுதிக்குள் படப்பிடிப்பு தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனிடையே, 'தலைவர் 173' படத்திற்கான போட்டோஷூட் சமீபத்தில் நிறைவடைந்தது. இதில் ரஜினிகாந்த் மருத்துவர் தோற்றத்தில் காணப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனவே, இப்படத்தில் அவர் மருத்துவர் கதாபாத்திரத்தில் நடிக்கக்கூடும் என்று கருதப்படுகிறது. படப்பிடிப்பின்போது எடுக்கப்பட்ட புகைப்படங்களுடன் கூடிய அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.




## 30 வயதுக்கு முன்பே மாரடைப்பா..? காரணம்..!




இன்றைய சமூகத்தில், வயது வரம்பின்றி பலரும் மாரடைப்பால் பாதிக்கப்படுகின்றனர். குறிப்பாக 20 முதல் 40 வயதுக்குட்பட்ட இளைஞர்களிடையே மாரடைப்பு ஏற்படும் விகிதம் கவலைக்குரிய வகையில் அதிகரித்துள்ளது. "நான் இன்னும் இளமையாகத்தான் இருக்கிறேன், அதனால் ஒன்றும் ஆகாது.. எனக்கு மாரடைப்பு வராது" என்று நினைத்து பலர் ஆரம்பக்கட்ட அறிகுறிகளைப் புறக்கணிக்கின்றனர். இத்தகைய அலட்சியப் போக்கு மிகவும் ஆபத்தானது என்று நிபுணர்கள் எச்சரிக்கிறார். இளைஞர்களிடையே இதய நோய்கள் அதிகரிப்பதற்கான முக்கிய காரணங்களை இப்போது பார்க்கலாம்..

தீய பழக்கவழக்கங்கள் போதைப் பழக்கங்கள்: இன்றைய இளைஞர்களிடையே புகைப்பிடித்தல் மற்றும் புகையிலை பயன்பாடு ஆகியவை பெருமளவு அதிகரித்துள்ளன; இவை இதயத்தின் முதன்மை எதிரிகளாக மாறிவிட்டன. இவை ரத்த நாளங்களில் அடைப்பை ஏற்படுத்தி, திடீர் மாரடைப்புக்கு வழிவகுக்கின்றன.

மன அழுத்தம் தூக்கமின்மை: வேலை மற்றும் தனிப்பட்ட வாழ்க்கைச் சூழலால் இளைஞர்கள் கடுமையான மன அழுத்தத்தை எதிர்கொள்கின்றனர். மேலும், இரவு நேரங்களில் தாமதமாகத் தூங்குவதும், போதுமான அளவு தூங்காததும் உடலில் ஹார்மோன் சமநிலையைப் பாதித்து, இதயத்தின் செயல்பாட்டை மந்தமாக்குகிறது.

ஒரே இடத்தில் அமர்ந்து செய்யும் வேலைகள்: தகவல் தொழில்நுட்பம் (IT) மற்றும் அலுவலகப் பணிகளில் நீண்ட நேரம் ஒரே இடத்தில் அமர்ந்து பணியாற்றும் வாழ்க்கை முறை இளைஞர்களிடையே பரவலாகிவிட்டது. உடல் உழைப்பு மற்றும் உடற்பயிற்சி இல்லாததால், இதயத்திற்குச் செல்லும் இரத்த நாளங்கள் மெல்ல மெல்ல பலவீனமடைந்து சேதமடைகின்றன.

துரித உணவு (Fast food) கலாச்சாரம்: பாக்கெட்டுகளில் அடைக்கப்பட்ட துரித உணவுகள் மற்றும் எண்ணெயில் பொரித்த உணவுகளை அதிகமாக உட்கொள்வது உடல் பருமன் மற்றும் உடலில் கெட்ட கொழுப்பின் அளவை அதிகரிக்கச் செய்கிறது. இது இளம் வயதிலேயே இதயத்திற்கு ரத்தம் கொண்டு செல்லும் தமனிகளில் அடைப்பை ஏற்படுத்துகிறது.

உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு: மாறிவரும் வாழ்க்கை முறையால், 30 வயதுக்கு முன்பே பலர் நீரிழிவு நோய் மற்றும் உயர் இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்படுகின்றனர். இவை உடலில் 'அமைதியான கொலையாளிகளாக' (silent killers) செயல்பட்டு, மாரடைப்பு ஏற்படும் அபாயத்தை இருமடங்காக்குகின்றன.

மரபியல் காரணங்கள்: குடும்பத்தில் உள்ள பெற்றோர் அல்லது உடன்பிறந்தவர்களுக்கு இளம் வயதிலேயே இதய நோய்இருந்திருந்தால், குடும்பத்தின் மற்ற உறுப்பினர்களுக்கும் மாரடைப்பு ஏற்படும் அபாயம் அதிகம். அத்தகையவர்கள் கூடுதல் விழிப்புடன் இருக்க வேண்டும்

நிபுணர்களின் ஆலோசனை: உங்கள் வாழ்க்கை முறையை மாற்றிக்கொள்ளுங்கள். தினமும் குறைந்தது 30 நிமிடங்களாவது உடற்பயிற்சி செய்வது, சரியான நேரத்தில் சத்தான உணவை உட்கொள்வது மற்றும் மன அழுத்தத்தைக் குறைப்பது ஆகியவை மிகவும் அவசியம். நெஞ்சில் ஏதேனும் புதிய அசௌகரியம் அல்லது மூச்சுத்திணறல் ஏற்பட்டால், உயிரைக் காக்க உடனடியாக ஒரு அடிப்படை இதயப் பரிசோதனைச் செய்துகொள்வது சிறந்தது என்று இதய நோய் நிபுணர்கள் அறிவுறுத்துகின்றனர்.

## சாயல்குடி ஜல்ஜீவன் திட்டத்தில் முறைகேடு புகார்; மாவட்ட ஆட்சியர் கள ஆய்வு செய்ய கோரிக்கை!



ராமநாதபுரம், ஜூன். 09–

ராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடி பேரூராட்சியில் மத்திய அரசின் ஜல்ஜீவன் திட்டத்தின் கீழ் நடைபெறும் குடிநீர் குழாய் பதிப்பு பணிகளில் முறைகேடுகள் மற்றும் ஒப்பந்த மீறல்கள் நடந்துள்ளதாக தமிழக வெற்றி கழகத்தினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

₹40.08 கோடி மதிப்பிலான இத்திட்டத்தில் குறைந்த ஆழத்தில் தரமற்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், பணிகள் முடிந்த பின்னரும் சாலைகள் முறையாக சீரமைக்கப்படாமல் குண்டும் குழியுமாக விடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. குடிநீர் குழாய்களின் தரம் குறித்தும் சந்தேகம் எழுந்துள்ளது.

பலமுறை புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என கூறும் பொதுமக்கள், மாவட்ட ஆட்சியர் நேரில் கள ஆய்வு செய்து ஒப்பந்த ஆவணங்கள், நிதி விவரங்கள் மற்றும் பணித் தர அறிக்கைகளை ஆய்வு செய்ய வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர். மேலும், விதிமீறல்கள் உறுதியாகும் பட்சத்தில் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தமிழக வெற்றி கழகத்தினர் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# பிஎஃப் பயனர்களுக்கு புதிய சலுகை..!

புதுடெல்லி, ஜூன். 09–

ஊழியர் வருங்கால வைப்பு நிதி அமைப்பு (EPFO) தனது சந்தாதாரர்களுக்கு ஒரு பெரிய நிம்மதியை அளிக்கும் வகையில் விதிகளில் முக்கிய மாற்றத்தைச் செய்துள்ளது. சில சிறப்புச் சூழ்நிலைகளில், சந்தாதாரர்கள் தங்கள் பிஎஃப் (PF) கணக்கில் உள்ள முழுத் தொகையையும் திரும்பப் பெறலாம்.. இதற்கு எந்தக் காரணத்தையும் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை. தகுதியுள்ள உறுப்பினர்கள் இப்போது எந்தக் காரணமும் கூறாமலேயே தங்கள் முழு பிஎஃப் தொகையையும் திரும்பப் பெற முடியும். அவர்கள் 100 சதவீதத் தொகையையும் திரும்பப் பெறலாம். கோரிக்கைகள் நிராகரிக்கப்படுவதைக் குறைக்கவும், தேவைப்படும் ஊழியர்களுக்கு உரிய நேரத்தில் நிதி உதவி கிடைப்பதை உறுதி செய்யவும் EPFO இந்த முடிவை எடுத்துள்ளது.




**எந்தச் சூழல்களில் பணத்தை எடுக்கலாம்?**

நிறுவனம் 15 நாட்களுக்கு மேல் மூடப்பட்டிருந்தாலோ அல்லது 'லாக்–அவுட்' (lock–out) செய்யப்பட்டிருந்தாலோ, 100 சதவீதப் பணத்தையும் திரும்பப் பெறலாம்.

இழப்பீடு ஏதுமின்றி ஊழியர் வேலையிழக்கும் சூழல் ஏற்பட்டால், முழுத் தொகையையும் திரும்பப் பெறலாம்.

இரண்டு மாதங்களுக்கு மேலாகச் சம்பளம் பெறாத நிலையில், முழுத் தொகையையும் திரும்பப் பெறலாம்.


நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருத்தல், பணிநீக்கம், ஓய்வு அல்லது ஆட்குறைப்பு போன்ற சூழல்களில் முழுத் தொகையையும் திரும்பப் பெறலாம்.

நிறுவனம் நீண்ட காலமாக மூடப்பட்டிருக்கும் சூழல்களிலும் பணத்தை எடுக்கலாம்.

ஊழியர் வேலையிழக்கும் சூழலிலும் பணத்தை எடுக்கலாம்.

கடுமையான நோய் அல்லது குடும்பத்தினருக்கான மருத்துவச் சிகிச்சையின் போதும் முழு பிஎஃப் தொகையையும் திரும்பப் பெறும் வசதி வழங்கப்பட்டுள்ளது.

## துபாயில் மினிபஸ் - லாரி மோதிய விபத்தில் இந்திய தொழிலாளர்கள் 7 பேர் பலி: 9 பேர் காயம்!



துபாய், ஜூன். 09–

துபாயில் மினிபஸ் – லாரி மோதிய விபத்தில் இந்திய தொழிலாளர்கள் 7 பேர் உயிரிழந்துள்ளனர். விபத்தில் மேலும் 9 இந்தியர்கள் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக துபாய் போலீசார் தெரிவித்துள்ளனர்.

## புதுச்சேரி அமைச்சரவையில் மேலும் 3 புதிய அமைச்சர்களுக்கு அனுமதி..!!



புதுச்சேரி, ஜூன். 09–

புதுச்சேரி அமைச்சரவையில் மேலும் 3 புதிய அமைச்சர்களுக்கு மத்தியஅரசு அனுமதி அளித்துள்ளது. என்.ஆர். காங்கிரஸ் கட்சியை சேர்ந்த ராஜவேலு, சிவக்கொழுந்து, பாஜக எம்எல்ஏ ராஜசேகரன் அமைச்சர்களாகின்றனர்.. இதன் மூலம் புதிய அமைச்சர்கள் பதவியேற்பு விழா நாளை நடைபெற வாய்ப்புள்ளது.

## அமைச்சருக்கு நன்றி தெரிவித்த நக்ஷத்ரா அவென்யூ குடியிருப்புவாசிகள்!



திருப்பூர், ஜூன். 09–

திருப்பூர் மாவட்டம் அவிநாசி சட்டமன்ற தொகுதி திருமுருகன் பூண்டி அருகே உள்ள நக்ஷத்ரா அவென்யூ குடியிருப்புவாசிகள் சார்பில் அவிநாசி சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திருமதி கமலி அவர்களிடம் அங்கு நடைபெற்று வரும் கோவிலுக்கு தேவையான மின் இணைப்பு தெருவிளக்கு வசதி மற்றும் சாக்கடை கால்வாய் தொடர்பான பிரச்சனைகளை அவரிடம் எடுத்துரைத்தனர்.

அதனை தொடர்ந்து ஆய்வு செய்ய அதிகாரிகளை அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார் மாநகராட்சி பொறியாளர் நேரடியாக அவன்யூ விற்கு வருகை தந்து ஆய்வு செய்து தேவையான பணிகளை உடனடியாக தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி அளித்தார் இதனை தொடர்ந்துநக்ஷத்ரா அவென்யூ குடியிருப்புவாசிகள் அமைச்சரை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்...



மத்திய அரசு இளைஞர் நலம்,விளையாட்டு உபகரணங்கள் வழங்கல் தேனி மாவட்டம், பெரியகுளம் அறிவுத் திருக்கோவில் அரங்கில் இந்திய அரசு இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் சார்பில், இளைஞர் மன்றங்களை ஊக்குவிக்கும் நோக்கில் பெரியகுளம் சட்டமன்றத் தொகுதியில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் மன்றங்களுக்கு அரசு பதிவேடுகள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

## கீழமுந்தலில் சட்டவிரோத மது விற்பனை செய்வதாக கூறி மாவட்ட ஆட்சியரிடம் மனு!



ராமநாதபுரம், ஜூன். 09–

ராமநாதபுரம் மாவட்டம் வாலிநோக்கம் அருகே உள்ள கீழமுந்தல் கிராமத்தில் சட்டவிரோத மது விற்பனை நடைபெறுவதாகவும் சில காவல்துறையினர் அதற்கு துணை நிற்பதாகவும், மாவட்ட ஆட்சியரிடம் கிராம மக்கள் மனு அளித்தனர். மது விற்பனையால் இளைஞர்கள் மற்றும் குடும்பங்கள் பாதிக்கப்படுவதாகவும், அதை தடுக்க வேண்டிய சில காவல்துறையினர் அலட்சியம் காட்டுவதாகவும் பொதுமக்கள் குற்றம்சாட்டினர்.

மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கச் சென்றபோது கிராம மக்களை காவல்துறையினர் தடுத்து நிறுத்தியதாகவும் புகார் தெரிவித்தனர். சட்டவிரோத மது விற்பனையில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதுடன், புகார் அளிக்கும் பொதுமக்கள் மற்றும் பெண்களுக்கு காவல்துறை அதிகாரிகள் பாதுகாப்பு வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். மாவட்ட நிர்வாகமும் காவல்துறையின் உயர் அதிகாரிகளும் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கிராம மக்கள் வலியுறுத்தி மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு அளித்தனர்.



தீயணைப்புத் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்ற அதிகாரி எழுத்தாளர் ஏகாம்பரம் அவர்களுக்கு மதுரை உலா நற்பணி மன்றம் சார்பாக கவிக்குயில் கணேசன் எழுதிய வாழ்த்து கவிதையை வாசித்து நினைவுப்பரிசாக மன்றத்தலைவர் கனகமகால் கார்த்திகேயன், செயலர் பரந்தாமன், பொருளாளர் கவிஞர் வீர ஆதிசிவத் தென்னவன் ஆகியோர் உள்ளனர்.

## ராமநாதபுரத்தில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்!




ராமநாதபுரம், ஜூன். 09–

ராமநாதபுரம் மாவட்டத்தில் ஏற்பட்ட தொடர் வறட்சி மற்றும் பருவமழை மாற்றத்தால் விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறி, தமிழ்நாடு வைகை விவசாயிகள் சங்கம் சார்பில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கூட்டுறவு வங்கிகளில் பெற்ற பயிர்க்கடனை திருப்பிச் செலுத்த முடியாமல் விவசாயிகள் திணறி வருவதாகவும், வங்கி ஊழியர்கள் நிலத்தை ஜப்தி செய்வோம் என மிரட்டுவதாகவும் குற்றச்சாட்டு எழுந்தது. இதையடுத்து, கூட்டுறவு பயிர்க்கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் மற்றும் வசூல் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தினர். ஆர்ப்பாட்டத்துக்குப் பின் கோரிக்கை மனு மாவட்ட ஆட்சியரிடம் வழங்கப்பட்டது.

# வேலை வாய்ப்பு

## யுபிஎஸ்சி 384 காலியிடங்கள் –பல்வேறு படிப்புகள்!




நிறுவனத்தின் பெயர்: மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம்
அறிவிப்பு எண்: 11/2026–CDS–II
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்
மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை: 394 ஒருங்கிணைந்த பாதுகாப்பு சேவைகள் தேர்வு (II), 2026 பணியிடங்கள்
பணியிடங்கள்: இந்தியா முழுவதும்
தொடங்கும் தேதி: 20.05.2026
கடைசி தேதி: 09.06.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://upsconline.nic.in/



திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில், 01 பயனாளிக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு அட்டையை மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார் வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.நாராயணன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் டாக்டர்.உமாமகேஸ்வரி, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) பூஷணகுமார், உதவி இயக்குநர் ஊராட்சிகள் (தெற்கு) மகாதேவன், மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) முருகேசன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் தணிகாசலம், உதவி ஆணையர் (கலால்) திரு.வேடியப்பன், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் தாமரைமணாளன், மாவட்ட பழங்குடியினர் நல திட்ட அலுவலர் செந்தில்குமார் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.




அதிமுக மறைந்த முன்னாள் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் சு குணசேகரன் முதலாம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி 35 வது வார்டு கிளை கழகம் மற்றும் வாலிபாளையம் ஊர் பொதுமக்கள் சார்பில் வாலிபாளையம் நால்ரோடு சந்திப்பில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது இந்த நிகழ்வில் மாநில மகளிர் அணி இணைச் செயலாளர் கவிதா குணசேகரன். மருத்துவர் அணி மாவட்ட இணைச் செயலாளர் பூமிஷ் குணசேகரன். மற்றும் கழக நிர்வாகிகள் 35 வது வட்ட கழக நிர்வாகிகள் வாலிபாளையம் ஊர் பொதுமக்கள் பங்கேற்றனர்.

## அதிரடியாக உயர்ந்த தங்கம் விலை!



சென்னை, ஜூன். 09–

சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.1,040 உயர்ந்து ரூ.1,13,600–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.130 உயர்ந்து ரூ.14,200–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த 4 நாட்களாக வெள்ளி விலையில் மாற்றம் இல்லை. வெள்ளி விலை ஒரு கிராம் வெள்ளி ரூ.270–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.


இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881



# மானிய விலை சிலிண்டர் எண்ணிக்கை 4 ஆக குறைப்பு!




புதுடெல்லி, ஜூன். 09–

கடந்த 2016ஆம் ஆண்டு மே மாதம் மத்திய அரசு தொடங்கிய திட்டம் பிரதான் மந்திரி உஜ்வாலா யோஜனா (PMUY).

இத்திட்டத்தின் கீழ், வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களுக்கு இலவச எரிவாயு இணைப்போடு, ஆண்டுக்கு 14.2 கிலோ எடையுள்ள 12 சிலிண்டர்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு வந்தன.

கடந்த ஆண்டு இந்த சிலிண்டர்களின் எண்ணிக்கை 12–லிருந்து 9 ஆகக் குறைக்கப்பட்டது.

தற்போது இந்த எண்ணிக்கையை மேலும் பாதியாகக் குறைத்து, ஆண்டுக்கு வெறும் 4 சிலிண்டர்கள் மட்டுமே மானிய விலையில் வழங்கப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது.

குடும்பங்களின் சராசரி எரிபொருள் நுகர்வு அளவைக் கணக்கில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அரசு தரப்பு விளக்கம் அளித்துள்ளது.

இதனால் ஆண்டுக்கு 4 சிலிண்டர்களுக்கு மேல் தேவைப்படும் பட்சத்தில், உஜ்வாலா பயனாளிகளும் சந்தை விலையிலேயே கூடுதல் சிலிண்டர்களை வாங்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இது ஏழைக் குடும்பங்களுக்கு கூடுதல் நிதிச்சுமையாக அமைந்துள்ளது.

வளைகுடா போர் சூழலால் எல்பிஜி இறக்குமதி பெருமளவு முடங்கியுள்ளதால் வணிக உபயோக சிலிண்டர் விலை கணிசமான உயர்ந்த நிலையில் வீட்டு உபயோக சிலிண்டர் முன்பதிவிலும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஏழை மக்களின் நலனே அரசின் மையக் கொள்கை-12 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு பிரதமர் மோடி பெருமிதம்!



புதுடெல்லி, ஜூன். 09–

பிரதமர் நரேந்திர மோடி தனது சமூக ஊடகப் பக்கத்தில் #12YearsOfGarib–Kalyan என்ற ஹேஷ்டேக்குடன் இந்த மைல்கல்லைப் பகிர்ந்துள்ளார். கடந்த 12 ஆண்டுகளில் இந்தியா பல பெரிய மாற்றங்களைக் கண்டுள்ளதாகவும், அந்த மாற்றங்களின் மையப்புள்ளியாக ஏழைகள் மற்றும் ஒடுக்கப்பட்டோரின் நலனே இருந்து வருகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல தசாப்தங்களாக நாட்டின் வளர்ச்சி பலன்களைப் பெறாமல் விளிம்பு நிலையில் இருந்த மக்களுக்கு அனைத்து உதவிகளும் நேரடியாகக் கிடைப்பதை இந்த அரசு உறுதி செய்துள்ளது. குறிப்பாக விவசாயிகளுக்கான PM–KISAN திட்டம், ஏழைகளுக்கான இலவச உணவு தானிய திட்டம், இலவச மருத்துவக் காப்பீடு, வீடமைப்பு, குடிநீர், சுகாதார பாதுகாப்பு மற்றும் பெண்கள் முன்னேற்ற திட்டங்கள் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியுள்ளதாகவும், டிஜிட்டல் தளங்கள் மற்றும் நேரடிப் பலன் பரிமாற்றம் மூலமாக ஏழை மக்களுக்கான நிதியுதவி எவ்வித முறைகேடுகளும், கசிவுகளும் இன்றி, வெளிப்படைத் தன்மையுடன் பயனாளர்களைச் சென்றடைகிறது. இது நிர்வாகத்தின் மீதான மக்களின் நம்பிக்கையை பலப்படுத்தியுள்ளது என்று பிரதமர் மோடி கூறியுள்ளார்.

மேலும், இந்தியா உலகின் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதார நாடுகளில் ஒன்றாக உருவெடுத்துள்ளதாகவும், டிஜிட்டல் இந்தியா, உள்கட்டமைப்பு முதலீடுகள் மற்றும் நலத்திட்டங்களின் ஒருங்கிணைந்த செயல்பாடுகள் நாட்டின் வளர்ச்சிக்கு வலுவான அடித்தளத்தை அமைத்துள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டார். “வளர்ந்த இந்தியா” என்ற இலக்கை நோக்கி அரசு தொடர்ந்து முன்னேறும் என்றும், மக்களின் வாழ்க்கையில் மேலும் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் வகையில் நலத்திட்டங்கள் மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் இடையறாது செயல்படுத்தப்படும் என்றும் பிரதமர் மோடி உறுதியளித்தார்.

மத்தியில் பிரதமர் மோடி முதன்முதலில் மே.26, 2014 அன்று பிரதமராகப் பதவியேற்றார். தற்போது, அவரது மூன்றாவது பதவிக்காலம் (NDA3.0) வெற்றிகரமாகத் தொடர்கிறது. 12 ஆண்டுகள் நிறைவடைந்ததைக் கொண்டாடும் வகையில், பா.ஜ.க மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் இணைந்து ஒரு மாத கால நாடு தழுவிய பிரசாரத்தை தொடங்கியுள்ளன. இந்த பிரசாரத்தில் பாதுகாப்பு, புதுப்பிக்கத்தக்க ஆற்றல், உர உற்பத்தி மற்றும் உள்நாட்டு– வெளிநாட்டுப் பாதுகாப்பு போன்ற பல்வேறு துறைகளில் அடைந்த ‘ஆத்மநிர்பர் பாரத்’ சாதனைகள் மக்களிடம் கொண்டு சேர்க்கப்படவுள்ளன.

“ஏழைகளின் நலனை மேம்படுத்தும் இந்த 12 ஆண்டுகாலப் பயணம், தற்போது ஒட்டுமொத்த மனித ஆற்றல் மற்றும் மேம்பாட்டிற்கான ஒரு மக்கள் இயக்கமாக மாறியுள்ளது. இது ‘வளர்ச்சியடைந்த இந்தியா’ என்ற நம் கனவை நனவாக்க வழிவகுக்கும்.”இதே வேளையில், இந்திய அரசியல் வரலாற்றில் மிக நீண்ட காலம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு தொடர்ச்சியாகப் பதவியில் இருக்கும் பிரதமர் என்ற ஜவஹர்லால் நேருவின் சாதனையை ஜூன் 10 அன்று பிரதமர் மோடி முறியடிக்க உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆட்சி கவிழ்ப்பு எங்கள் நிலைப்பாடு அல்ல.. தி.மு.க. முன்னாள் அமைச்சர் பரபரப்பு பதிவு!



சென்னை, ஜூன். 09–

விருதுநகர் வடக்கு மாவட்ட தி.மு.க. கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான தங்கம் தென்னரசு எம்.எல்.ஏ. வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:–

தமிழ்நாட்டில் புதிதாக ஒரு ஆட்சி அமைந்து ஒரு மாதம் ஆகிறது. இந்த ஒரு மாதமும் டிவியைப் பார்த்தாலும் நாளிதழ்களைத் திருப்பினாலும் கொலையும், கொள்ளையும், பாலியல் வன்கொடுமைகளும், போதை மருந்து நடமாட்டமும் தான் செய்திகளாக இருக்கின்றன. பல்வேறு குற்றச் சம்பவங்களில் ஆளும் கட்சியான த.வெ.க. நிர்வாகிகளே சம்பந்தப்பட்டு உள்ளனர்.

ஆளும்கட்சியைச் சேர்ந்த பெண் ஒருவர், சொந்த கட்சிக்காரர்களால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு, அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். அந்தப் பெண்ணால் குற்றம் சாட்டப்படும் ஆளும் கட்சி எம்.எல்.ஏ மீது இதுவரை நடவடிக்கை இல்லை. ஆனால் பாதிக்கப்பட்ட பெண்ணைக் கட்சியை விட்டு நீக்கி இருக்கிறது தூய சக்தி என்று கபட வேடம் போடும் அரசு.

“இந்த ஆட்சியை ஆறு மாதம் விமர்சிக்க மாட்டோம்” என்று எங்கள் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொல்லியிருந்தாலும், நிலைமை மிக மோசமாகப் போய்வரும் நிலையில் அவர் விமர்சனம் செய்தார். “ஆறு மாதம் அல்ல, மூன்று மாதம் கூட தாங்காது என்ற நிலைமையில் தான் ஆட்சி போய்க்கொண்டு இருக்கிறது” என்று தலைவர் அவர்கள் பேசினார்கள். ஆனால், மூன்று மாதத்தில் இந்த ஆட்சி கவிழ்ந்துவிடும் என்று அவர் சொன்னதாகத் திரித்து செய்தி பரப்பப்படுகிறது.

இதுகுறித்து பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் செய்தியாளர்கள் கேட்டபோது, தி.மு.க. தலைவர் அப்படி பேசியிருக்கக் கூடாது என்று பேசி உள்ளனர். ஆட்சி கவிழும் என்று தலைவர் அவர்கள் பேசவுமில்லை; அது அவரது நிலைப்பாடும் அல்ல!

“ஆறு மாதம் வரை, இந்த ஆட்சி பற்றி விமர்சித்துப் பேசப் போவதில்லை” என்று அவர் சொல்லியிருந்தார். ஆனால் நாள்தோறும் கொலை, கொள்ளை, அரிவாள் வெட்டுகள், போதை மருந்துகள் நடமாட்டம், பெட்ரோல் குண்டு வீச்சுகள், மின்வெட்டு, விவசாயிகள் போராட்டம், பாலியல் வன்கொடுமைகள் நடப்பதைப் பார்க்கும் போது, இதை விமர்சிக்காமல் எப்படி இருக்க முடியும் என்ற பொருளில், “மூன்று மாதமாவது தாங்குமா என்ற கேள்விக்குறியோடுதான் ஆட்சி நடந்துகொண்டிருக்கிறது” என்று பொருள்படும்படிதான் சொன்னார்கள்.

ஆசை அறுபது நாள் என்பார்கள். ஆனால் இன்றைய ஆளும் கட்சிக்கு வாக்களித்தவர்கள் ஒரு வாரம் தான் அமைதியாக இருந்தார்கள். சமூகவலைத்தளங்கள் முழுக்கவே ஆளும் கட்சிக்கு எதிரான ஆவேசமான கருத்துகளைத்தான் மக்கள் சொல்லி வருகிறார்கள். இதைத்தான் தலைவர் அவர்கள் தனது உரையில் சுட்டிக் காட்டினார்கள். கலைப்பு, கவிழ்ப்பு எண்ணத்தோடு அல்ல. மக்களே களைத்துப் போய்விட்டார்கள் அதற்குள்!

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வேண்டுமென்றே ஏற்படுத்தப்படும் மின்வெட்டுகள் குறித்து கண்காணித்து வருகிறோம் - அமைச்சர் நிர்மல்குமார்!



சென்னை, ஜூன். 09–

சென்னை கிண்டியில் மின்சாரத்துறை அமைச்சர் நிர்மல்குமார் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

* மின்சாரத்துறையில் கட்டமைப்பு போதுமானதாக இல்லை.
* சோலார் மின் உற்பத்தியில் மற்ற மாநிலங்களை விட தமிழ்நாடு பின்தங்கி உள்ளது.
* சோலார் மின் உற்பத்தியை அதிகரிக்க அடுத்த 2 வாரங்களில் புதிய கொள்கை அறிவிக்கப்படும்.
* மின்வெட்டு எதனால் ஏற்படுகிறது, எவ்வளவு நேரத்தில் சரி செய்யப்படுகிறது என்பதை வெளிப்படையாக தெரிவிக்கிறோம்.
* திட்டமிட்டு பியூஸ் கேரியர் பிடுங்கப்படுகிறது. திட்டமிட்டு விரும்பத்தகாத செயல்களில் ஈடுபடுகின்றனர்.
* வேண்டுமென்றே ஏற்படுத்தப்படும் மின்வெட்டுகள் குறித்தும் கண்காணித்து வருகிறோம்.
* பியூஸ் கேரியர் பிடுங்குவோர் சிலரை சிசிடிவி அடிப்படையில் கைது செய்யும் நடவடிக்கை எடுத்துள்ளோம்.
* வடசென்னையில் மின்வெட்டை கண்காணித்து சரிசெய்ய கூடுதலாக ஊழியர்கள் பணியமர்த்தப்பட்டனர்.
* பெரம்பூரில் 40 நிமிடங்களில் சரி செய்யப்பட்டாலுமே சிலரின் தூண்டுதல் பேரில் போராட்டம் நடந்தது.
* இரவு நேரங்களில் மின்விநியோகம் தடை விவகாரத்தில் குழு அமைத்து நடவடிக்கை எடுத்து வருகிறோம்.
* மின்வெட்டு தொடர்பாக மின்னகத்தின் மூலமே புகார்கள் பெறப்பட்டு உடனடி நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.



சென்னை, ராஜாஜி சாலையில் உள்ள மாவட்ட பதிவாளர் அலுவலக கூட்டரங்கில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் த. லோகேஷ் தமிழ்செல்வன் அவர்கள் தலைமையில், அனைத்து துணை பதிவுத்துறை தலைவர்கள், மாவட்ட பதிவாளர்கள் (நிர்வாகம் மற்றும் தணிக்கை), பதிவுத்துறை உதவி பொறியாளர்கள் ஆகியோர்களின் பணித்திறன் குறித்த முதல் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் வணிகவரி, பத்திரப் பதிவுத்துறை மற்றும் அறநிலையங்கள் துறை செயலாளர் ஜெ.குமரகுருபரன், பதிவுத்துறை தலைவர் திரு.ஜி.கே. அருண் சுந்தர் தயாளன் கூடுதல் பதிவுத்துறை தலைவர்கள் மற்றும் பதிவுத்துறை தலைமையிட அலுவலர்கள் பங்கேற்றனர்.

# த.வெ.க. சார்பில் ஆப்பரேஷன் நார்த் வியூகம்!




சென்னை, ஜூன். 09–

வட மாவட்டங்களில் வன்னியர் சமூக ஓட்டுகளை குறி வைத்து, தமிழக வெற்றிக் கழகம் காய்களை நகர்த்தி வருகிறது.

இது குறித்து, த.வெ.க., நிர்வாகிகள் சிலர் கூறியதாவது: சட்டசபை தேர்தலில், சென்னை மற்றும் புறநகரில் அதிக தொகுதிகள் த.வெ.க.,வுக்கு கிடைத்தன; ஆனால், வட மாவட்டங்களில் குறைவான தொகுதிகளே கிடைத்தன.

வன்னியர் சமூக மக்கள் அடர்த்தியாக இருக்கும் அரியலுார், விழுப்புரம், மயிலாடுதுறை மாவட்டங்களில், ஒரு தொகுதியில் கூட த.வெ.க., வெற்றி பெறவில்லை. கடலுார், தர்மபுரி, கள்ளக்குறிச்சி, கிருஷ்ணகிரி, திருப்பத்துார், திருவண்ணாமலை மாவட்டங்களில் தலா ஒரு தொகுதி மட்டுமே பெற முடிந்தது. இந்த மாவட்டங்களில், பா.ம.க., – அ.தி.மு.க., கூட்டணி 32 தொகுதிகளில் வெற்றி பெற்றது.

கொள்கை தலைவராக அம்பேத்கரை வைத்து, பட்டியலின மக்களின் ஓட்டுகளை மட்டுமே த.வெ.க., குறிவைத்து இயங்கியதே இதற்கு காரணம்.

தேர்தலுக்கு பின், த.வெ.க.,வுடன் வி.சி.க., இணைந்திருக்கிறது. இதனால், வரும் காலத்திலும், வட மாவட்டங்களில் வன்னியர் சமூக ஓட்டுகள் த.வெ.க.,வுக்கு வருவதில் சிக்கல் ஏற்படும். இதை கருத்தில் வைத்து, ‘ஆப்பரேஷன் நார்த்’ என்ற வியூகத்தை த.வெ.க., தொடங்கி உள்ளது.

அதன்படி, கடலுார், விழுப்புரம் மாவட்டத்துக்கு, பொறுப்பு அமைச்சராக அமைச்சரும், கட்சியின் பொதுச்செயலருமான ஆனந்த் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் வழியே, வன்னியர் சமூக பிரமுகர்களை கட்சிக்குள் கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது.

வட மாவட்டங்களில் பலமாக இருக்கும் பா.ம.க.,வை நீர்த்துப்போக செய்தால் தான், த.வெ.க.,வால் வளர முடியும் என்பதால், அதற்கான பணிகளும் தொடங்கி விட்டன.

முதல்கட்டமாக, வேலுார், ராணிப்பேட்டை, திருப்பத்துார், திருவண்ணாமலை மாவட்டங்களைச் சேர்ந்த, பா.ம.க., – மா.செ., உட்பட முக்கிய நிர்வாகிகளை, த.வெ.க., தலைமை துாக்கியிருக்கிறது. இதுநாள் வரை பா.ம.க., தலைவர் அன்புமணியை, முதல்வர் விஜய் விமர்சனம் செய்தது இல்லை.

அன்புமணியை விமர்சித்தால், அந்த சமூகத்தினர் மத்தியில் அவர் இன்னும் வேகமாக வளருவார். எனவே தான், அவர் குறித்து பேசாமலேயே, பா.ம.க.,வை கரைக்க திட்டமிடப்பட்டுள்ளது. கரூர், டில்லி பயணம் முடிந்த பின், தர்மபுரி, கடலுார் உள்ளிட்ட மாவட்டங்களுக்கு, முதல்வர் விஜய் நேரில் சென்று, புதிய திட்டங்களை அறிவிக்க உள்ளார். இதன் வாயிலாக, 2029 லோக்சபா தேர்தலில், வட மாவட்டங்களை முற்றிலும் கைப்பற்ற முடியும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# முன்கூட்டியே அளிக்கப்பட்டுள்ள ரூ.1,000 கோடி தேசிய பேரிடர் மேலாண்மை நிதி - அமைச்சர் தகவல்!



சென்னை, ஜூன். 09–

தமிழ்நாட்டிற்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள, மத்திய அரசு தேசிய பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து ரூ. 1,000 கோடி நிதியை விடுவித்துள்ளதாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

பேரிடர் மேலாண்மை துறைக்கு ரூ. 1,000 கோடி தேவை என மாநில அரசு கோரிக்கை விடுத்திருந்த நிலையில், மத்திய அரசு அந்த முழுத் தொகையையும் முன்கூட்டியே வழங்கியுள்ளதாக செய்தியாளர்களிடம் பேசிய செங்கோட்டையன் கூறினார். கோவை, நீலகிரியில் பேரிடர் மேலாண்மை துறையினர் தயார் நிலையில் இருக்கிறார்கள். ஒருவேளை நீலகிரியில் நிலச்சரிவு ஏற்பட்டால் விரைவில் மீட்புப் பணிகளை மேற்கொள்ள ஹெலிகாப்டர் தயார் நிலையில் இருக்கின்றன என்றும் அமைச்சர் செங்கோட்டையன் குறிப்பிட்டு உள்ளார்.

கேரளா மற்றும் தமிழ்நாட்டில் தென்மேற்குப் பருவமழை தொடங்கியுள்ள சூழலில், இந்த நிதி முன்னெச்சரிக்கை பணிகளுக்குப் பெரிதும் உதவும் என்று கூறி உள்ளார். ஜாதி சான்றிதழ் விரைந்து கிடைக்கவும், பத்திரப் பதிவு துறையில் உள்ள தேக்கங்களை களையவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# இன்ஸ்டா பிளஸ்..புதிய கட்டண சேவை அறிமுகம்: மாதம் எவ்வளவு தெரியுமா?



சமூக வலைத்தளங்களில் அதிகம் பேர் பயன்படுத்தும் செயலியாக இன்ஸ்டாகிராம் உள்ளது. மெட்டா நிறுவனத்திற்கு சொந்தமான இன்ஸ்டாகிராமை இந்தியாவில் மட்டும் சுமார் 45 கோடி பேர் பயன்படுத்துகிறார்கள். ஆரம்பத்தில் புகைப்படம் மட்டும் பதிவு செய்யும் செயலியாக இருந்த இன்ஸ்டாகிராம், நாளடைவில் வீடியோ பதிவேற்ற வசதியையும் கொண்டு வந்தது. டிக் டாக் தடைக்கு பிறகு இன்ஸ்டாவில் அறிமுகமான ரீல்ஸ் வசதி பயனர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றது. பயனர்களை கவர்வதற்காக அவ்வப்போது புதிய அம்சங்களை இன்ஸ்டா அறிமுகம் செய்து வருகிறது.

இந்த நிலையில் இன்ஸ்டாகிராமில் இன்ஸ்டா பிளஸ் என்ற புதிய கட்டணச் சேவை அறிமுகம் ஆகியுள்ளது.‘இன்ஸ்டாகிராம் பிளஸ்’ என்று அழைக்கப்படும் இந்த சந்தா திட்டம், பயனர்களுக்கு கூடுதல் அம்சங்கள், தனி விருப்பங்கள் உள்ளிட்ட சேவைகளை வழங்கும். இந்த திட்டத்தின் விலை மாதத்திற்கு ரூ. 299.

இன்ஸ்டாகிராம் பிளஸ் என்பது முற்றிலும் விருப்பத்தேர்வு மட்டுமே என்றும், இன்ஸ்டாகிராமை இலவசமாகப் பயன்படுத்துபவர்களுக்கு எந்த மாற்றமும் இல்லை. வழக்கம் போல இலவச சேவையை தொடர முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கூடுதல் அனுபவத்தை விரும்பும் பயனர்களுக்காக மட்டுமே இந்த புதிய பிரீமியம் சேவை உருவாக்கப்பட்டுள்ளது. இந்தச் சந்தா மூலம், சாதாரண பயனர்களுக்குக் கிடைக்காத சில சிறப்பு அம்சங்களைப் பெறலாம். இன்ஸ்டாகிராம் எதிர்காலத்தில் கொண்டு வரவிருக்கும் சில புதிய அம்சங்களை, சாதாரண பயனர்களுக்கு முன்பாகவே பிளஸ் உறுப்பினர்கள் சோதித்து பார்க்கும் வாய்ப்பும் இருக்கும் என்று கூறப்படுகிறது. இதனால், புதிய தொழில்நுட்ப மாற்றங்களை இன்ஸ்டாகிராம் பிளஸ் பயனர்கள் துவக்கத்திலேயே பயன்படுத்த முடியும்.

# அதிமுக கொறடா விவகாரம் தொடர்பாக சபாநாயகர் விளக்கம்!



சென்னை, ஜூன். 09–

அதிருப்தி அதிமுக எம்எல்ஏக்கள் மீது நடவடிக்கையா என்பது குறித்து சபாநாயகர் விளக்கம் அளித்துள்ளார். தவெக அரசுக்கு எதிராக வாக்களித்த 21 அதிமுக எம்எல்ஏக்களுக்கு மன்னிப்பு. 21 பேர் வருத்தம் தெரிவித்த கடிதங்களை எடப்பாடி பழனிசாமி அனுப்பி இருந்தார் என்று சபாநாயகர் விளக்கமளித்துள்ளார். 4 எம்எல்ஏக்கள் மீதான தகுதிநீக்கம் செய்யக் கோரும் மனு மீது நடவடிக்கை தொடங்கியுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020